1972 நவம்பர் 14]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, சென்னை நகரத்து மக்களுடைய பால் தேவையைப் பூர்த்தி செய்கிற வகையிலும், காலா காலத்தில் கிடைக்கவேண்டிய வகையிலும் தற்போது பால் அபிவிருத்தித் துறை மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஏற்கெனவே நாள்தோறும் 50 ஆயிரம் லிட்டர் சென்னைக்கு வழங்கினோம். இப்போது சுமார் 70 ஆயிரம் லிட்டர் வழங்கப்படுகிறது. ஒன்றிரண்டு மாதங்களில் சுமார் ஒரு லட்சம் லிட்டர் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

* 309 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there was any strike by the workers of the Madhavaram Milk Project during the month of July 1970;

(b) if so, their grievances; and

(c) whether their grievances have since been redressed?

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மாதவரம் பால் பண்ணை திட்டத் தொழிலாளர்கள் ஏதேனும் வேலை நிறுத்தம் செய்தனரா?

(இ) ஆமெனில், அவர்களது குறைகள் யாவை?

(உ) அவர்களது குறைகள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம். மாதவரம் பாற்பண்ணைத் திட்டத் தொழிலாளர்களால் 10—7—1970 லிருந்து 23—7—1970 முடிய வேலை நிறுத்தம் செய்யப்பட்டது.

(இ) & (உ) அந்த வேலை நிறுத்தம் எந்தக் காரணத்திற்காகச் செய்யப்பட்டது என்பதை விளக்கும் முன் அறிவிப்பு எதையும் பால் உற்பத்தித் துறை மேம்பாட்டு ஆணையாளருக்குக் கொடுக்காததால், இந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதாகும். எனினும் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னர் தீர்க்கப்படாத தங்களது 10 குறைபாடுகளைக் குறிப்பிட்டு 1—8—1970-ல் உணவு-வருவாய்த்துறை அமைச்சரிடம் தமிழ்நாடு பாற்பண்ணைத் திட்டத் தொழிலாளர் சங்கம் முறையீடு ஒன்றைக் கொடுத்தது. சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கை @ இந்த 10 குறைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் காட்டுகிறது.

@ 118-121ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சடிக்கப்பட்டுள்ளது.